# கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் -2010

**1. நிதிக் கூற்றுக்கள்**

-----------------------------

**1.1 அபிப்பிராயம்**

----------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குக் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-------------------------------------------------------------------

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

-------------------------------------------------------------------

இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தெய்விடப்பட்டுள்ள ஆனால் தொடர்ந்தும் பாவனையிலிருக்கும் சொத்துக்களை மீள் விலைமதிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்ற 07 வாகனங்களை மீள விலை மதித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட ரூபா.148,199,683 மொத்தமான கணக்கீட்டுக் குறைபாடுகள் 2011 மார்ச் 30 ஆந் திகதிய வரைபு அறிக்கையின் மூலம் நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதில் ரூபா.6,379,688 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு மீளத்திருத்தியமைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்தன. சீராக்கப்படாத ரூபா. 141,819,995 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்பட்டதுடன் மேலும் அவ்வாறான குறைபாடுகள் இருப்பதற்கான சாத்தியத்தினை கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது.

(ஆ) ஜயசேகர புலமைப்பிரிசில் நிதியம் மற்றும் அதற்குரிய வட்டித் தொகையாகிய ரூபா 268,250 இனை நிதியங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலுத்தப்பட வேண்டிய மீதியொன்றாக இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது

(இ) மாணவர் நிலைய நிர்மாணிப்பு ஒப்பந்தத்தின் 22 கேள்விப் பத்திரங்களை தயாரிப்பதற்காக ஆலோசகர்களிற்கு செலுத்திய ரூபா 126,000 தொகை சில்லறை வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவக வளவில் காணப்பட்ட மரங்களிலிருந்து அரிந்தெடுக்கப்பட்ட அரிமர இருப்பின் பெறுமதியினை மதிப்பிட்டு கணக்குகளிற்கு கொண்டு வந்திருக்கவில்லை.

(உ) மத்திய அரசாங்க ஆயுர்வேத திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த ஆயுர்வேத வைத்தியசாலையின் நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் நிறுவகத்தின் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

---

நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள 08 சொத்து வகைகளின் 2009 திசெம்பர் 31 இல் இருந்தபடியான ரூபா 220,795,990 மொத்தமான மீதிகளிற்கும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் நிலையான சொத்துப் பட்டோலையில் அத்திகதியில் காட்டப்பட்டுள்ள மீதிக்கும் இடையில் ரூபா 141,425,745 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

2010 திசெம்பர் 28 ஆந் திகதிய 1692 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச் சிட்டையினால் நிறுவக மீளாய்வுச் சபை உறுப்பினர்களிற்கு தங்குமிடம் மற்றும் இராப்போசனத்திற்காக ரூபா 30,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை 2010 திசெம்பர் 30 ஆந் திகதி தீர்வுசெய்யப்பட்டிருந்த போதிலும் செலவினங்களிற்குரிய சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (நி.பி)<br>நி.பி 165 | 5 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 78,555 ஆன காசுக் கட்டளைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை தேறாதிருந்ததுடன் அப் பணத்தினை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதியாண்டு தொடங்குவதற்கு 03 மாதங்களிற்கு முன்னர் பாதீட்டினை அங்கீகரித்துக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டினை தயாரித்து முடிக்கையில் நிதியாண்டின் 10 மாதங்கள் கடந்திருந்தது. ஆகையால் நிறுவகம் பாதீட்டுக் கட்டுப்பாட்டில் இருந்து விலகியிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------------

### 2.1 நிதி மீளாய்வு

-------------------------

#### 2.1.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா.100,753,823 பற்றாக் குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா.93,077,141 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 89,525,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் அப்பற்றாக்குறை ரூபா. 11,228,823 இற்கு குறைவடைந்திருந்ததுடன் கடந்த ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா.86,000,000 ஆன மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா.7,077,141 வரை குறைவடைந்திருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

#### 2.2.1 செயலாற்றுகை

----------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கற்கைச் செயலாற்றுகை**

-----------------------------------------

2009/2010 ஆம் கல்வியாண்டுக்காக நிறுவகத்தில் பதிவுசெய்திருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 151 ஆக காணப்பட்டதுடன் இவர்களில் 08 பேர் ஏனைய பல்கலைக்கழகங்களிற்கு மாற்றம் செய்து அனுப்பிவைக்கப் பட்டிருந்ததுடன் 25 மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றிருந்தனர். இதன் படி, மீளாய்வாண்டின் இறுதியில் பாடநெறிகளை பின்பற்றிவந்திருந்த புதிய மாணவர்களின் எண்ணிக்கை 118 ஆகிய பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 78% ஆகும். அதன் படி, நிறுவகத்தின் வளங்கள் குறைப்பயன்பாட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பரீட்சை பெறுறேுகள்**

----------------------------------

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளிற்காக தோற்றியிருந்த 170 மாணவர்களில் பரீட்சைகளில் சித்தியடைந்திருந்தோரின் எண்ணிக்கை 107 ஆகிய 63% ஆக காணப்பட்டதுடன் குறைசித்தியடைந்திருந்தோரின் எண்ணிக்கை 33% ஆன 56 மாணவர்களாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) பாடத்திட்ட திருத்தம்**

-------------------------------------

2001 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்பட்டு வருகின்ற ஆயுர்வேத மருத்துவமாணி சத்திரசிகிச்சை பட்டப் பாடநெறிக்கான பாடத்திட்டத்தினதும் பரீட்சை வினாத்தாளினதும் அமைப்பின் தரத்தினையும் கட்டமைப்பினையும் முன்னேற்றும் பொருட்டு மீளமைப்பதற்காக 2005 ஆம் ஆண்டில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 மார்ச் 30 ஆந் திகதி வரை அப்பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

----------------------------------------------------------

மாதமொன்றிற்கு ரூபா 31,000 கிரயத்தில் 128 kbps இயலளவு கொண்ட சர்வதேச வலையமைப்பொன்று பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அந்த இயலளவு நிறுவகத்திற்குப் போதுமானதாக இல்லாமையால் சர்வதேச வலைப்பின்னலுக்குள் நுழைவதற்கு மாணவர்களிற்கு மிக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளமையால் அவர்கள் அசௌகரியமடைகின்றமை அவதானிக்கப்பட்டது.

**2.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 824,000 கிரயத்தில் வெளித்தரப்பினர் ஒருவரால் தயாரிக்கப்பட்டிருந்த கணனி முறைமையிலமைந்த நிலையான சொத்துப் பதிவேடொன்று மீளாய்வாண்டில் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பதிவேடு கிடைத்ததன் பின்னர் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களை உள்ளடக்கி அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

ஒரேயொரு இரகசியக் குறியீட்டினால் இப் பதிவேட்டினை வாசிப்பதற்கும் தகவல்களை உட்புகுத்துவதற்கும் சாத்தியம் உள்ளமையால் இப் பதிவேட்டின் பாதுகாப்பு மற்றும் தரவுகளின் சரியான தன்மை மீதான உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாக காணப்படுகின்றது. தொடர் இலக்கத்தின் படி சொத்துக்கள் கணக்கினை அணுக முடியாததுடன் சொத்துக்கள் காணப்படும் இடத்தினை மாற்றியமைக்கையில் அவை மாற்றப்பட்டுள்ள பகுதி பதியப்பட்டிராமையால் புதிய இடத்தினை இனங்கண்டு கொள்ள முடியாமை போன்ற காரணங்களினால் சொத்துக்கள் மீதான உள்ளகக் கட்டுப்பாடு நலிவான நிலையில் இருக்கக் காணப்பட்டது.

நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரிக்கையில் நூலகப் புத்தகங்கள் பௌதீக ரீதியான பரிசீலனைக்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன் பாவனைகள் பதிவேட்டில் காணப்படும் ஒழுங்கின் படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. நூலகப் புத்தகங்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்குதல் மீதான தெரிவுப் பரிசோதனையில் பாவனைகள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டுள்ள விலைகளிற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டுள்ள விலைகளிற்கும் இடையில் ரூபா 3,460 தொடக்கம் ரூபா 43,000 வரையிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) உடலியல் பிரிவில் மரணித்த உடல்களிலிருந்து உறுப்புக்களை மாற்றுதல், மரணித்த உடல்களைப் பாதுகாத்தல், உடல் உறுப்புக்களை திரட்டுதல் மற்றும் சுத்திகரித்தல் பணிகளுக்குத் தேவையான இரண்டு தொழிலாளர் பதவிகள் இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக வெற்றிடமாக காணப்பட்டன.

### 2.2.4 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வதுபிடிவல மூலிகைத் தோட்டத்தினைச் சுற்றி கம்பிவேலி அமைப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 1,986,650 ஆன மொத்தக் கிரய மதிப்பீட்டிற்காக வேலைகள் பொறியியலாளரினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இப் பணிக்காக அவ்வப்போது விலைமனுக்கள் கோரப்பட்டு பகுதி பகுதியாக பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கொள்வனவுகளிற்காக கொள்வனவுகள் சபையினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவுமில்லை. இது தொடர்பில் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,129,491 இற்காக நிதிச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பஹல வீதியவத்த ஊழியர் உத்தியோகபூர்வ வதிவிடத்தினை திருத்தம் செய்வதற்காக ரூபா 223,608 கிரயம் கொண்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சந்தை போட்டி விலைமனுக்கோரல் முறை பின்பற்றப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்த பொருட்களில் காணப்பட்ட ரூபா 158,118 பெறுமதியான கொங்ரீட் உற்பத்திகளை குறித்த உற்பத்தி நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யாது அந் நிறுவன உற்பத்திகள் வேறு ஒரு நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) இரசாயணப் பகுப்பாய்வுப் பிரிவின் மருந்துக் களஞ்சிய இராக்கைகளை பொருத்துவதற்கான தேவை சுட்டிக்காட்டப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் விலை மனுக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் விலை மனுக்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பித்து பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறைந்தபட்ச விலையினை அடிப்படையாகக் கொண்டு வேலை அத்தியட்சகரால் வழங்கப்பட்ட பரிந்துரைக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் மரங்களை அரிபவராகவோ அல்லது விற்பனையாளராகவோ இல்லாதிருந்ததுடன் அவ் வழங்குனரிற்கு பலா மரங்களை போக்குவரத்துச் செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையால் மாதிரிகளின் படி மரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இதுவரை மாற்று வழிமுறைகளும் முன்னெடுக்கப் பட்டிருக்கவில்லை.

### 2.2.5 மாணவர் ஒருவரிற்கான கிரயம்

-----------------------------------------------------

கற்கைகள், நிர்வாகம் மற்றும் நிதி என்ற வகையில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவினம் ரூபா 107,379,657 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் கற்கைப் பணிகளில் ஈடுபட்டிருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 334 ஆக காணப்பட்டமையால் வருடத்திற்கான மாணவர் ஒருவரிற்கான சராசரிக் கிரயம் ரூபா 321,496 ஆகும்.

**2.2.6 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட குறைந்தபட்ச மீதி ரூபா 18,082,243 ஆனமையால் மிகை நிதிகளை முதலீடு செய்யாது நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.2.7 நூலக நிர்வாகம்**

--------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தின் நூலகப் புத்தகங்கள் 1993 ஆம் ஆண்டில் இறுதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை 17 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் பாவனைகள் பதிவேட்டில் காண்பிக்கப்படும் நூலகப் புத்தகங்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாணவர்களிற்கு வெளியே எடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்ட புத்தகங்களில் ரூபா 123,674 பெறுமதியான 229 புத்தகங்களும் பதவியணியினருக்கு வழங்கப்பட்ட புத்தகங்களில் ரூபா 20,915 ஆன 35 புத்தகங்களும் மிக நீண்டகாலமாக மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

--------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களிற்கு விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) நூலக நிர்வாகம்

(உ) நிலையான சொத்துக்கள்